இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்

---

(1998, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, நவெம்பர் மாதம் 27 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 21.50 தபாற் செலவு: ரூபா 7.00

**1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

[1998 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஒ. 29/ 97

**இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், நீர்வாழ் உயிரின வளங்களையும் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டமென எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், அது, கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

## பாகம் I

### இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தலும் அமைத்தலும்

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*இலங்கைத் தேசிய நீரியல் பொருட் களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதி காரசபையைத் தாபித்தல்.*

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு ஒதுக்கப்பட்ட பெயரின் மூலம், இடையறாவழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அப்பெயரில் எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

டீ- 049758 -1,100 (98/07)

பணிப்பாளர்கள் சபை.

3. அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு ஆகியன (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருக்கும் பணிப்பாளர்கள் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் :—

(அ) கடற்றொழிலில் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்துவதில், விஞ்ஞானத்தில் மற்றும் தொழில்நுட்பத்தில், கைத்தொழிலில், வர்த்தகத்தில், நிதி அல்லது நிருவாகத்துறையில் அல்லது சட்டத்தில் பரந்த அளவிலான அனுபவத்தைக் கொண்ட அத்துடன் இத்துறைகளில் ஆற்றலைக் காட்டியிருக்கின்ற ஆட்களில் இருந்து அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களான எட்டுப் பணிப்பாளர்கள் (இப்பந்தியின்கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் ஒருவர், இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழிப் பணிப்பாளர்கள் :—

(i) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மீன்பிடித் தொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் ;

(ii) நீர்ப்பாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர் ;

(iii) மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர்;

(iv) கமத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர் ;

(v) வனவிலங்குப் பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர் ;

(vi) சுற்றாடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, அவ்வமைச்சரின் அமைச்சைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(vii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அவ்வமைச்சின் அலுவலர் ஒருவர்.

சபையின் அங்கத்துவத்துக்கான தகைமை.

4. ஆளொருவர், அவர் –

(அ) பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் இருக்கின்ற ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனம் அற்றவர் எனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவில் இருக்கின்ற ஏதேனும் சட்டத்தின் கீழ், கடனிறுக்க வகையற்ற அல்லது வங்குறோத்தான ஆளொருவர் என வெளிப்படுத்தப்பட்டு, அத்துடன் விடுவிக்கப்படாதவொரு கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குறோத்தானவராகவிருந்தால் ; அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் ஏதேனும் நீதிமன்றத்தினால் சுமத்தப்பட்ட மறியற்றண்டனையொன்றை அனுபவித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்,

சபையின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்து இருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் மற்றும் தவிசாளர் தொடர்பிலான ஏற்பாடு.

5. (1) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அக்கடிதம் அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுக்கு வருதலும் வேண்டும்.

(2) அமைச்சர் அதற்கான காரணம் எதனையும் காட்டாமல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், சுகவீனம் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாமல் இருக்கின்றவிடத்து, அமைச்சரானவர், 3 ஆம் பிரிவைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

(4) ஒராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவரின் பதவிக்காலமானது மூன்றாண்டுகளாக இருத்தல் வேண்டும்.

(5) காலம் கழிந்ததனால் தமது பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, அமைச்சரானவர், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவருடைய இடத்துக்கு இன்னொரு பணிப்பாளரை நியமிக்கலாம் ; அத்துடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட பணிப்பாளர், அவர், எப்பணிப்பாளரை அடுத்துவருகின்றாரோ, அப்பணிப்பாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) அமைச்சர், சபையின் பணிப்பாளர்களில் இருந்து சபையின் தவிசாளரை நியமித்தல் வேண்டும்.

(8) சபையின் தவிசாளர், அமைச்சருக்கு அதற்கென முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம் ; அத்துடன், அத்தகைய பதவிவிலகலானது, அக்கடிதம் அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுறுதல் வேண்டும்.

(9) அமைச்சர், அதற்கான காரணம் எதனையும் காட்டாமல், சபையின் தவிசாளரைத் தவிசாளர் பதவியிலிருந்து எந்த நேரத்திலும் அகற்றலாம்.

(10) சபையின் தவிசாளர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருக்கின்றவிடத்து, அமைச்சரானவர், அவருடைய இடத்தில் பதிற் செயலாற்றுவதற்கென வேறு எவரேனும் பணிப்பாளரை நியமிக்கலாம்.

(11) எட்டாம், (9) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபைத் தவிசாளரின் பதவிக்காலமானது, சபையில் தவிசாளரின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

6. (1) சபை, ஆகக் குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சபை, அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல் கையாளப் படுவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

அக்கறையை வெளிப்படுத்துதல்.

7. சபையினால் பொறுப்பேற்கப்பட்ட அல்லது உருவாக்கப் பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில், பொறுப்பு முயற்சியில் அல்லது ஒப்பந்தத்தில் நிதிசார் வகையில் அல்லது வேறுவகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறையைக் கொண்டிருக்கின்ற பணிப்பாளர் ஒருவர், அவருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் முதலாவது சந்தர்ப்பத்தில், சபையின் கூட்டமொன்றில் தமது அக்கறையை வெளிப்படுத்துதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வெளிப் படுத்துகையானது, சபையின் கூட்டக் குறிப்புகளில் பதியப் படுதல் வேண்டும் ; அத்துடன், அதன் பின்னர் அத்தகைய பணிப்பாளர், சபை வேறுவகையில் பணித்தாலன்றி, அத்தகைய கருத்திட்டம், பொறுப்பு முயற்சி அல்லது ஒப்பந்தம் தொடர்பில், சபையின் ஏதேனும் தீர்மானமெடுத்தலிலோ அல்லது முடிவெடுத்தலிலோ பங்குபற்றுதலாகாது.

பணிப்பாளர்களின் ஊதியம்.

8. சபையின் பணிப்பாளருக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் வழங்கப்படலாம்.

வெற்றிடங்கள் இருப்பது, நட்வடிக்கைகளை வலிதுடைய தற்றனவாக்கு தலாகாது.

9. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் பணிப்பாளர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் அல்லது பணிப்பாளர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தினால் மட்டும் வலிதுடையதற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

அதிகாரசபையின் இலச்சினை.

10. (1) அதிகாரசபை பொது இலச்சினை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அது, சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது, சபையின் இரு பணிப்பாளர்களின் சமுகத்திலன்றி ஏதேனும் சாதனத்திலோ அல்லது ஆவணத்திலோ பொறிக்கப்படுதலாகாது. இவ்விருவரும் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச் சாதனத்தில் அல்லது அவ்வாவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையானது, அதிகாரசபையின் இலச்சினையானது, எந்தச்சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சாதனங்களினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

அதிகாரசபையின் பணிகள்.

11. அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:–

(அ) நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு நீர்வாழ் உயிரின வளங்களையும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் தொழிலையும் அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) நன்னீர் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல், கரையோர நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் மற்றும் கடற்பண்ணை ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதன்மூலம் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதை மேம்படுத்துதல் ;

(இ) அலங்கார மீன்கள் உட்பட ஏற்றுமதிக்கென உயர் பெறுமதிவாய்ந்த மீனினங்களின் பண்ணை வளர்ப்பை மேம்படுத்துதல் ;

(ஈ) சூழல் தூய்மைக்குச் சாதகமான நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நீர்வாழ் உயிரின வளங்கள் அனுகூலமான முறையில் உபயோகப்படுத்தப்படுவதை மேம்படுத்துதல் ;

(உ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தலில் சிறிய நடுத்தர அத்துடன் பெரிய அளவிலான தனியார் துறை முதலீட்டை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஊ) நீர்வாழ் உயிரின வளங்களையும், நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் தொழிலையும் முகாமை செய்தல், பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல் அத்துடன் ஒழுங்குபடுத்துதல் ;

(எ) நீர்வாழ் உயிரின வளங்களின் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர், விற்பனையாளர், வழங்குநர் மற்றும் விநியோகத்தர் என்றவாறு தொழிலைக் கொண்டு நடாத்துதல் ;

(ஏ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் ஆகியவற்றின் முகாமைக்காகவும், அபிவிருத்திக்காகவும், திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்து நடைமுறைப்படுத்துதல் ;

(ஐ) உயிரின வேறுபாட்டைப் பாதுகாத்தல்.

அதிகாரசபையின் தத்துவங்கள்.

**12.** அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அதிகாரசபையானது, பின்வரும் தத்துவங்களில் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையும் பிரயோகிக்கலாம் :—

(அ) நீரியல் பொருட்களின் பண்படுத்தலுக்காக, நீர் மற்றும் நில வளங்களில் அபிவிருத்திக்கான சாத்தியக்கூறை உறுதிப்படுத்துவதற்கென ஆராய்ச்சிகளையும், வளங்கள் பற்றிய ஆய்வுகளையும் ஆரம்பித்தலும் நடாத்துதலும் ;

(ஆ) நீர்வாழ் உயிரின வளங்கள் மற்றும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் பற்றிய தகவலைச் சேகரித்து அதைப் பரப்புகின்றமைக்கான பொறுப்பை எடுத்தல் ;

(இ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் நிலையங்களைத் தாபித்தலும் முகாமை செய்தலும் ;

(ஈ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தலிலும் நீர்வாழ் உயிரின வளங்களின் அபிவிருத்தியிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலதிபர்களுக்கு தொழில்நுட்ப உதவி, நிதியுதவி அல்லது வேறுவகையில் உதவி அளித்தல் அத்துடன் உள்நாட்டு மீன்பிடியாளர்களுக்கும், மீன் பண்ணையாளர்களுக்கும் நிதியுதவிக்கு அல்லது தொழில்நுட்ப உதவிக்கு அல்லது முகாமைத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்தல் ;

(உ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற—ஆதனத்தைக் கொள்ளுதல் அத்துடன் வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல் அல்லது வாடகைக்கு விடுதல் அல்லது விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

ஆயின், அதிகாரசபையின் அசைவற்ற ஆதனம் எதுவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி விற்கப்படுதலாகாது ;

(ஊ) அதிகாரசபையினால் புரியப்படும் சேவைகளுக்காக அல்லது வழங்கப்படும் வசதிகளுக்காகவும் உபகரணத்துக்காகவும் கட்டணங்களை அல்லது வேறு ஏதேனும் அறவீடுகளை விதிப்பனவு செய்தலும் அத்துடன் அறவிடுதலும் ;

(எ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையோ அல்லது உடன்படிக்கை களையோ, நேரடியாகவோ அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ அல்லது கூட்டுமுயற்சி என்ற வகையிலோ இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுடன் செய்துகொள்ளுதல், புரிதல் அத்துடன் நிறைவேற்று தல் ;

(ஏ) பின்வருவன தொடர்பில் விதிகளை, நடவடிக்கை முறைகளை அத்துடன் செயற்றிட்டங்களை உருவாக் குதல் :—

(i) அதிகாரசபையின் அலுவல்களின் நிர்வாகம் ;

(ii) அதிகாரசபையின் அலுவலர்களின் அத்து டன் சேவையாளர்களின் நியமனங்கள், பதவி யுயர்வுகள், சேவை நியதிநிபந்தனைகள் அத்துடன் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ;

(iii) அதிகாரசபையின் நிதியத்திலிருந்து பணங் களை மீளப்பெறுதல் அல்லது கொடுப்பனவு செய்தல் ;

(ஐ) அதிகாரசபையின் அலுவலர்களின் மற்றும் சேவை யாளர்களின் நன்மைக்காக சகாய நிதிகளை, செயற்றிட்டங்களை அல்லது ஓய்வூதிய செயற்றிட்டங் களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலும் அத்துடன் அத்தகைய எவையேனும் நிதிகளுக்கு அல்லது செயற்றிட்டங்களுக்கு உதவுதொகைகளை அளித்த லும் ;

(ஒ) அதன் பணிகள் சரியாக நிறைவேற்றப்படுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய திணைக் களங்களை, பிரிவுகளை அத்துடன் பிராந்திய அலுவலகங்களைத் தாபித்தல் ;

(ஓ) அதிகாரசபையின் தவிசாளருக்கு அல்லது எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது எவரேனும் அலுவலருக்கு, அதிகாரசபையின் பணிகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்குக் கையளிப்பது அவசியமானதென சபை கருதக்கூடியவாறான அதிகாரசபையின் அத்தகைய தத்துவங்களைக் கையளித்தல் ;

(ஔ) காசாகவோ அல்லது வேறுவகையிலோ கொடைகளை, மானியங்களை, நன்கொடைகளை அல்லது உதவிப்பணங்களை ஏற்றுக்கொள்ளுதலும் அத்துடன் அவற்றை அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பிரயோகித்தலும் ;

(க) அதிகாரசபையின் பணங்களை, சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ங) அத்தகைய கம்பெனிக்கு, கழகத்துக்கு அல்லது பொறுப்பு முயற்சிக்கு அதிகாரசபையினால் புரியப்பட்ட ஏதேனும் சேவைக்காக அல்லது அத்தகைய கம்பெனிக்கு, கழகத்துக்கு அல்லது பொறுப்பு முயற்சிக்கு அதிகாரசபையினால் செய்யப்பட்ட ஏதேனும் விற்பனைக்காக அல்லது அவற்றிலிருந்து அதிகாரசபைக்கு வருமதியான ஏதேனும் தனிசுக்காக அத்துடன் அதிகாரசபையின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கான அல்லது முன்னேற்றுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதற்காக, கொடுப்பனவாக அல்லது பகுதிக்கொடுப்பனவாக அத்தகைய ஏதேனும் கம்பெனி, கழகம் அல்லது பொறுப்பு முயற்சி என்பவற்றிடமிருந்து பங்குத் தொகுதிகளை அல்லது பங்குகளை அல்லது தொகுதிக்கடன் முறிகளை அல்லது வேறு பிணைப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் ; அத்துடன்

(ச) அதிகாரசபையின் பணிகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு அவசியமானதெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

## பாகம் II

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.

13. (1) சபை, அதிகாரசபைக்குப் பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் முடிபுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்; அத்துடன், சபையினால் அவருக்குச் சாட்டப்படக்கூடியவாறான அல்லது கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளையும் புரிதல் வேண்டும்.

அதிகாரசபையின் வேறு பணியாட்டொகுதி.

14. (1) சபையானது, இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு, அதிகாரசபையின் பணிகள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு அவசியமெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்துடன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கமைய இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதங்களில் ஊதியம் வழங்கப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

15. (1) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், அவ்வலுவலர் எந்த அமைச்சின்கீழ் ஊதியத்தில் இருக்கின்றாரோ, அந்த அமைச்சுக்கான செயலாளரினதும், பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய் காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலிருக்கும் அலுவலர் எவரும் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றின் மூலம் எவ்வாளொருவர் அரசாங்கத்துக்குக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் சேவைபுரிவதாக உடன்பட்டுக் கொண்டிருந்தாரோ, அவ்வாளை அதிகாரசபை ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதி எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சின் நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்திப் பிரிவின் பகிரங்க அலுவலர்களினால் கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப் பட்ட அறிவித்தல்.

16. (அ) அரசாங்கத்தின் இடமாற்றம் செய்யப்படக்கூடிய சேவையில் இல்லாத அத்தகைய அலுவலர் எவராகவும் இருக்கின்றவாறான, (இச்சட்டத்தின், இப்பாகத்தில் "பிரிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சின் நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும், பாராளுமன்றத்தினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதிக்குப் பின்னர், ஆனால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருக்கு, அத்தகைய அலுவலர் —

(i) அவர் பிரிவின் ஓய்வூதியம் பெறப்படற்பாலவரான அலுவலர் ஒருவராக அத்தேதியன்று பத்தாண்டு களுக்குக் குறையாத ஓய்வூதியம் பெறப்படற்பால தான சேவையைக் கொண்டிருப்பவராக இருந்தால் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று அதிகார சபையின் ஊழியர் ஒருவராக வர எண்ணியிருக் கின்றார் என ; அல்லது

(ii) அவர் பிரிவின் ஓய்வூதியம் பெறப்படற்பால வரான அலுவலர் ஒருவராக அத்தேதியன்று பத்தாண்டுகளுக்கு குறைவான ஓய்வூதியம் பெறப்படற்பாலதான சேவையைக் கொண்டிருப் பவராக இருந்தால் பகிரங்க சேவையை விட்டு விலகி, அதிகாரசபையின் ஊழியராக வர எண்ணியிருக்கின்றார் என ;

(iii) அவர், பகிரங்க சேவை சகாய நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவை சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துகின்ற ஒருவராக இருந்தால் பகிரங்க சேவையை விட்டு விலகி அதிகாரசபையின் ஊழியராக வர எண்ணி யிருக்கின்றார் என ; அல்லது

(iv) ஓய்வு பெறவும் அல்லது பகிரங்க சேவையை விட்டு விலகவும் எண்ணியுள்ளாரெனவும் அத்துடன் அதிகாரசபையின் ஊழியர் ஒருவராக வர எண்ணியிருக்கவுமில்லை என, எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருக்கு, (அ) என்னும் பந்தியின்கீழ், பிரிவின் பகிரங்க அலுவலர் ஒருவரால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட அறிவித்த லொன்றானது, இறுதியானதாதல் வேண்டும்.

16 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்படாமல் இருப்பதன் பயன்.

17. நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், 16 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii), (iii) அல்லது (iv) என்னும் உட்பந்திகளின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலைக் கொடுக்காத, பிரிவின் பகிரங்க அலுவலர் எவரும், அத்தேதிக்குப் பின்னர், பிரிவின் பகிரங்க அலுவலர் ஒருவராக பதவியில் தொடர்ந்து இல்லாதொழிதல் வேண்டும்.

16 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் பயன்.

18. (1) நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர், 16 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii), (iii) அல்லது (iv) என்னும் உட்பந்திகளின்கீழ் அறிவித்தல் கொடுக்கின்ற, பிரிவின் பகிரங்க அலுவலர் எவரும் -

(அ) அத்தகைய அறிவித்தல் (i) ஆம் உட்பந்தியின்கீழ் அவரினால் கொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் அதிகாரசபையின் ஊழியர் ஒருவராக வருதல் வேண்டும், அத்துடன் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்பட்டது என்ற ஏதுவின் மீது அவர் பகிரங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய ஓய்வூதியம் ஒன்றுக்கு அவர் தகவுடையவராதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் அவரினால் அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றவிடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதற்குப்பின்னரும், அதிகாரசபையின் ஊழியர் ஒருவராக வருதல் வேண்டும், அத்துடன், 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தேதியன்று பகிரங்க சேவையை விட்டு விலகிவிட்டார் எனக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன், அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்பட்டதென்ற ஏதுவின் மீது அவர் பகிரங்க சேவையை விட்டு விலகியிருந்தால், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அளிப்பொன்றுக்கு அவர் தகவுடையவராதல் வேண்டும் ; அல்லது

(இ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின்கீழ் அவரினால் அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்ற விடத்து, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அதிகாரசபையின் ஊழியர் ஒருவராக வருதல் வேண்டும் ; அத்துடன், பகிரங்க சேவை சகாய நிதியத்தின் நோக்கங்களுக்காக, அத்தேதியன்று பதவியிலிருந்து விலக்கப்பட்டதன் மூலமாகவன்றி வேறுவகையில் அரசாங்கசேவையை விட்டு விலகிய வராகக் கருதப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஈ) அத்தகைய அறிவித்தலானது, அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியின்கீழ் அவரால் வழங்கப்பட்டுள்ள விடத்தும், அத்துடன் –

(i) அவர் அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வகுப்பினை அல்லது விவரணத்தினைச் சார்ந்த பகிரங்க அலுவலர் ஒருவராகவிருந்தாலும், நியமிக்கப் பட்ட தேதியன்று பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறியவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பதவியானது இல்லாது ஒழிக்கப்பட்டதன் காரணமாக அவர் பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறியிருந்திருப்பாரானால் ஓய்வூதி யங்கள் பற்றிய குறிப்புகளின்கீழ் அளிக்கப் பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராதலும் வேண்டும் ;

(ii) அவர் அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வகுப்பினை அல்லது விவரணத்தினைச் சார்ந்த பகிரங்க அலுவலர் ஒருவராகவிருந்தாலும், நியமிக்கப் பட்ட தேதியன்று பகிரங்க சேவையைவிட்டு விலகியவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பதவியானது இல்லாதொழிக்கப்பட்டதன் காரணமாக பகிரங்க சேவையைவிட்டு விலகியிருந்தி ருப்பாரானால் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டி ருக்கக்கூடியதான அத்தகைய ஒரு அளிப் புக்கு உரித்துடையவராதலும் வேண்டும் ; அல்லது

(iii) அவர் அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வகுப்பினை அல்லது விவரணத்தைச் சார்ந்த பகிரங்க அலுவலர் ஒருவராகவிருந்தாலும், பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தேதியன்று பதவியிலிருந்து விலக்கப்பட்டதன் மூலமாகவன்றி வேறுவகையில் அரசாங்க சேவையைவிட்டு விலகியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது இசைவின்மை இருக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய முரண்பாட்டின் அல்லது இசைவின்மையின் அளவுக்கு அத்தகைய மற்றைய ஏற்பாடுகளின்மீது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அதிகாரசபையின் குறித்த சில ஊழியர்களுக்கு விசேட ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல்.

19. பின்வரும் ஏற்பாடுகள், 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தப்படுவதன் பயனாக, நியமிக்கப்பட்ட தேதியன்று அத்தகைய ஊழியர் ஒருவராக வந்த அதிகார சபையின் எவரேனும் ஊழியருக்கும் அத்துடன் அவர் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஊழியர், அத்தகைய ஊழியரினாலும், சபையினாலும் இணங்கிக்கொள்ளப்படக்கூடிய வாறான அத்தகைய நியதி, நிபந்தனைகள்மீது அதிகாரசபையினால் ஊழியத்துக்கமர்த்தப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நியதி, நிபந்தனைகள், அத்தகைய ஊழியர் எந்த நியதி, நிபந்தனைகள் மீது முன்னர் பிரிவில் ஊழியம் புரிந்தாரோ அந்த நியதி, நிபந்தனைகளிலும் பார்க்கக் குறைவான சாதகமானதாக இருத்தல் ஆகாது.

(ஆ) அத்தகைய ஊழியர் நியமிக்கப்பட்ட தேதியன்று ஓய்வூதியத்திற்கு உரித்துடையதானதென வெளிப் படுத்தப்பட்ட பதவி ஒன்றைக் கொண்டுள்ளவராயும் அத்துடன் பத்து வருடங்களுக்குக் குறைந்ததும் எட்டு வருடங்களுக்குக் குறையாததுமான ஓய்வூ தியத்திற்குரித்துடைய சேவையைக் கொண்டி ருந்தவராயுமுள்ள பிரிவின் பகிரங்க அலுவலர் ஒருவராக இருந்திருந்தால், அப்போது —

(i) அவர், ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகளின் நோக்கங்களுக்காக மாத்திரம், அரசாங்கத் தின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடைய அவரது சேவைக்குச் சேர்க்கும் பொழுது கூட்டு மொத்தமாகப் பத்து வருட ஓய்வூதியத்திற் குரித்துடைய சேவையாக (அதிகாரசபையின் கீழான சேவையானது அத்தகைய கூட்டு மொத்தத்தைக் கணக்கிடுவதற்காக, அரசாங் கத்தின்கீழான ஓய்வூதியத்திற்குரித்துடைய சேவையாகக் கணக்கிடப்படும்) இருப்பதான அத்தகைய காலப்பகுதிவரை நியமிக்கப்பட்ட தேதியன்று அவர் பிரிவில் கொண்டிருந்த பதவியை வகிக்கின்றவராகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) அவர் தொடர்பில், அதிகாரசபையானது, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து திறை சேரிக்கான பிரதிச் செயலாளருக்கு, திரட்டு நிதியத்தில் வரவு வைப்பதற்கென, எச் சேவைக்காலப் பகுதியின்போது அவர் ஓய்வூதிங்கள் பற்றிய குறிப்புகளின் நோக்கங் களுக்காக, நியமிக்கப்பட்ட தேதியன்று அவர் பிரிவில் வகித்த பதவியை வகிக்க வேண்டு மெனக் கருதப்படுகின்றாரோ, அச்சேவைக் காலப் பகுதியின் ஒவ்வொரு நிறைவான மாதத்திற்கும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தைச் செலுத்துதல் வேண்டும் ; அத்துடன்

(iii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள காலப்பகுதியின் முடிவில், அவர் பகிரங்க சேவையிலிருந்து இளைப்பாறிய வராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காலப்பகுதியின் நிறைவின்மேல் பதவியை நீக்கிய ஏதுவின் மேல் பகிரங்க சேவையிலிருந்து அவர் இளைப்பாறியிருந்தால் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடியதான அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

## பாகம் III

## நிதி

அதிகாரசபையின் நிதியம்.

**20.** (1) அதிகாரசபையாது, தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அதிகாரசபையின் நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டிற்கெனப் பாராளு மன்றத்தினால், காலத்திற்குக்காலம் ஒதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகள் ;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று கடற்றொழில் மற்றும் நீர்வாழ், உயிரின வளங்கள் அமைச்சின் நீரியல் பொருட்கள் பண்படுத்தல் அபிவிருத்திப் பிரிவின் வரவில் இருந்தவையான அத்தகைய எல்லாத் தொகைகள் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் அதன் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் மற்றும் நிறைவேற்று கையில் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ;

(ஈ) அதிகாரசபையினால் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகள் என்ற வகையில் பெறப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் ;

(உ) கடன்கள், நன்கொடைகள், மானியக்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்ற வகையில், எத்தன்மைத்தானதுமான ஏதேனும் வழிகளிலிருந்து அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கையில், புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படுகின்றவாறான அத்தகைய எல்லாத்தொகைகளும் அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**21.** அதிகாரசபையின் ஆரம்ப மூலதனமானது, ஐந்து கோடி ரூபாக்களாகவிருத்தல் வேண்டும். ஆரம்ப மூலதனத் தொகையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைக் கட்டணங் களின் திரட்டு நிதியத்திலிருந்து அதிகாரசபைக்குச் செலுத் துப்படுதல் வேண்டும். ஆரம்ப மூலதனம்.

**22.** (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது, எது எப்படியிருப்பினும், அதிகாரசபையானது, பின்வரும் கொடுப்பனவுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும் :– வரிகள் மற்றும் வேறு கொடுப்பனவுகளிலிருந்து அதிகார சபைக்கு விலக்களித்தல்.

(அ) அதிகாரசபையின் வருமானம் அல்லது இலாபங்கள் அல்லது வேறு பெறுகைகள் மீதான ஏதேனும் வரி ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக நிறைவேற்றப்படும் ஏதேனும் சாதனத்தின் மீது அத்தகைய சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வை, ஆயின் இவ்விலக்களிப்பானது அதிகாரசபை எந்த முத்திரைத் தீர்வையைக் கொடுப்பதற்குப் பொறுப்பாயிருந்திருக்கக் கூடுமோ அந்த முத்திரைத் தீர்வைக்கே ஏற்புடையதாகும்.

(2) அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அதிகாரசபையின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு அத்தகைய பண்டங்களை இறக்குமதி செய்தலானது உசிதமானது எனக் கருதப்பட்டால், அதிகாரசபையினால் அதன் நிதியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பண்டங்கள் மீதான ஏதேனும் சுங்கத்தீர்வையைக் கொடுப்பனவு செய்வதிலிருந்து அதிகாரசபைக்கு விலக்களிக்கலாம்.

(3) அதிகாரசபைக்கும் வேறெவரேனும் ஆளுக்குமிடையில் ஏதேனும் உடன்படிக்கையைக் கொண்டுள்ளதும் அதிகாரசபையினால் அளிக்கப்பட்ட அல்லது அளிக்கப்படவேண்டிய சேவைகளுக்கு அதிகாரசபைக்கு கொடுப்பனவிற்கு ஏற்பாடு செய்வதுமான ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், அல்லது வேறுவகையில் அதிகாரசபையின் வேலைக்கு ஆதரவளிப்பதில், அதிகாரசபையும் அத்தகைய வேறு ஆளும், அத்தகைய சாதனத்தின் மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக அல்லது அதிகாரசபையின் நிதியத்திற்கு ஒரு உதவுதொகையாக, அதிகாரசபைக்குக் கொடுப்பனவொன்றைச் செய்கின்ற எவரேனும் ஆள், அத்தகைய கொடுப்பனவுத் தொகையை, அத்தகைய கொடுப்பனவானது, உண்மையாகச் செய்யப்பட்ட ஆண்டிற்கான அத்தகைய ஆளின் வருமான வரிக்கான பொறுப்பைக் கணக்கிடும் நோக்கத்திற்காக, வருமானத்திலிருந்து ஒரு கழிப்பனவாகக் கோரலாம்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகள், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முரணாகவுள்ளது, எது எப்படியிருப்பினும், வலுவுள்ளதாதல் வேண்டும்.

அதிகாரசபையின் கடன் பெறுவதற்கான தத்துவம்.

**23.** சபையானது, அமைச்சரின் சம்மதத்துடனோ அல்லது அவரால் வழங்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்கவோ, இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுகையில் அதிகாரசபைக்குத் தேவைப்படக்கூடியவாறாக அத்தகைய பணங்களை மேலதிகப்பற்று மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ தற்காலிகமாகக் கடன் பெறலாம்.

ஆயின், இப்பிரிவின்கீழ் சபையினால் பெறப்பட்ட ஏதேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தமானது, எந்நேரத்திலும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுதலாகாது.

அதிகாரசபையின் நிதியாண்டு.

**24.** அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.

**25.** (1) சபையானது, வருமானம் மற்றும் செலவினம் அத்துடன் அதிகாரசபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குகளின் சரியான புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டம் ஏற்புடைத்தாதல்.

**26.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபைக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது.

## பாகம் IV

## பொது

அமைச்சருக்குத் தகவலைக் கொடுத்துதவுதல்.

**27.** சபையானது, அதிகாரசபையின் எல்லா அல்லது எவையேனும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அதன் நிதி நிலைமை தொடர்பிலும், காலத்திற்குக்காலம் அமைச்சர் கேட்கக்கூடியவாறான அத்தகைய தகவலை அவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களம் அல்லது அதன் கிளை தவிர்ந்த, எவரேனும் ஆளுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் அந்தரங்கமானதெனக் கருதப்படுவதற்குச் சபையானது கட்டுப்பட்டுள்ள கருமங்கள், தொடர்பிலான தகவல் எதுவும் இப்பிரிவின் கீழ் வெளியிடப்படுதலாகாது.

அமைச்சரின் பணிப்புரைகள்.

28. அமைச்சர், அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும், சபைக்குப் பொதுவான பணிப்புரைகளையும் அத்துடன் சபையுடனான கலந்தாலோசனையின் பின்னர் விசேட பணிப்புரைகளையும் வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புரைகள் அத்தகைய சபையினால் கொண்டுநடாத்தப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் நடவடிக்கைகள் பற்றிய புலனாய்வுக்கு கட்டளையிடுவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

29. அமைச்சர், காலத்துக்குக்காலம், அவர் குறித்துரைக்கக் கூடியவாறாக அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் அதிகாரசபையின் எல்லா அல்லது ஏதேனும் நடவடிக்கைகள் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல், சபையானது, அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் வழங்குதலும் அத்தகைய எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

அரசின் ஆதனத்தையும் ஒப்பந்தங்களையும் அதிகார சபைக்குக் கைமாற்றுதல்.

30. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் —

(அ) இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்ற அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்பட்ட அரசின் ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தையும் ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின ஏதேனும் பணிகளுடன் தொடர்புடைய அரசின் ஏதேனும் ஒப்பந்தத்தையும் அல்லது பொறுப்பையும்,

அதிகாரசபைக்குக் கைமாற்றலாம்.

(2) அரசின் அசையும் ஆதனம், ஒப்பந்தம் அல்லது பொறுப்பு எதுவும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபைக்குக் கைமாற்றப்படுதலாகாது.

(3) அரசின் அசையா ஆதனம் எதுவும், அரச காணிகள் என்னும் விடயமானது, குறித்தொதுக்கப்பட்டுள்ளவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபைக்குக் கைமாற்றப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்று கசெற்றில் வெளியிடப்பட்டதன் மேல், அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து, பயனுறுமாறு —

(அ) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதலும், அதிகாரசபையின் ஆதனங்களாகவிருத்தலும் வேண்டும் ;

(ஆ) அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் அதிகாரசபையின் ஒப்பந்தங்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பந்தங்களின் கீழான அரசின் எல்லா இருந்து வருகின்ற உரிமைகளும் கடப்பாடுகளும் அதிகாரசபையின் உரிமைகளாகவும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதலும் வேண்டும் ;

(இ) அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் அதிகாரசபையின் பொறுப்புக்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் தத்துவங்களைக் கையளித்தல்.

31. (1) சபையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மேல் விதிக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, சபையின் தவிசாளருக்கு அல்லது பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் கையளிப்பு, எப்படியிருப்பினும், சபையானது, அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

தகவலை வேண்டுவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

32. (1) சபை அல்லது சபையினால் அதன் சார்பில் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் அலுவலர், எழுத்திலான அறிவித்தல் மூலம், எவரேனும் ஆளை அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள், அவ்வாளின்

அறிவுக்குள்ளானதும் இச்சட்டத்தின் கீழ் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் சபையை இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறானதும், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமங்கள் தொடர்பிலானதுமான அத்தகைய எல்லாத் தகவலையும், சபைக்கு அல்லது அவ்வலுவலருக்குக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை வேண்டுமென்றே தவறுகின்ற ; அல்லது

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம், ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தும்போது, அவரது அறிவுக்குத் தவறானதெனத் தோன்றுகின்ற ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுகின்ற ; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின் கீழ் தரப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகையில் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலிலிருந்து ஏதேனும் விடயத்தை வேண்டுமென்றே விட்டுவிடுகின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் தவறறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

அதிகாரசபைக்கெனக் காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளல்.

33. (1) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காக அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டு, அத்துடன் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலுக்கு அதிகாரமளிக்கின்றவிடத்து, அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுத்தப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, காணிகொள்ளல் சட்டத்தின்கீழ்க் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்படுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவுக்கென காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படுவதற்குச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகை எதுவும் அதிகார சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப் பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

34. அதிகாரசபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல் லைக்குட்பட்ட அட்டவணையிடப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் பணிப்பாளர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையா ளர்களாகக் கருதப் படுதல்.*

35. அதிகாரசபையின் எல்லாப் பணிப்பாளர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக் காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண் டும்.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பு.*

36. (1) (அ) அதிகாரசபையால் இச்சட்டத்தின்கீழ் நல்லெண் ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாரசபைக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அதிகாரசபையின் எவரேனும் பணிப்பாள ரால் அல்லது எவரேனும் அலுவலரால், சேவை யாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்து டன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக் கெதிராக,

வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் இருத்தலாகாது.

(2) அதிகாரசபையால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையால் உறப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் அதிகாரசபையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் அவருக்கெதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட செலவு எதுவும், அத்தகைய நடவடிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம கருதினால், அத்தகைய செலவு அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

37. (1) அமைச்சரானவர் —

(அ) நீரியல் பொருட்களைப் பண்படுத்தலை முகாமை செய்தல் ;

(ஆ) நீர்வாழ் உயிரின வளங்களை முகாமை செய்தல் ;

(இ) எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அக்கருமங்கள் யாவும்,

தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின், வசதியாகக் கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்தின்முன் அங்கீகாரத்துக்காகக் கொண்டுவரப் படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணிகள் (ஆட்சியுடைமை மீளப் பெறுதல்) சட்டத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**38.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சியுடைமை மீளப்பெறுதல்) சட்டத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பதன் வரைவிலக்கணத்தில் அதன் விடயம் (ஊ) என்பதை உடனடுத்துப் பின்வரும் விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஊஊ) அத்தகைய காணி இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் ;

(ஆ) "அரச காணி" என்பதன் வரைவிலக்கணத்தில், "விடயத்திற்கேற்ப, 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "விடயத்திற்கேற்ப, 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் அல்லது 1998 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்."

நிலைமாறு கால ஏற்பாடு.

39. (1) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சின் நீரியல் பொருட்களின் பண்படுத்தல் அபிவிருத்திப் பிரிவின் (இப்பிரிவில் "பிரிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நோக்கங்களுக்கு நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளன்று பாவிக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் அனைத்தும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து எல்லாப் பாரபந்தங்களிலுமிருந்து விடுபட்டதாக அதிகாரசபைக்கு உரித்தாதல் வேண்டும்.

(2) அமைச்சின் உள்நாட்டு மீன்பிடித் தொழிற்பிரிவால் பாவிக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளன்று நிலைத்திருப்பதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பில் பிரிவுக்காக அல்லது அதன் சார்பில் அரசுடன் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் செயலாளரால் செய்துகொள்ளப்பட்ட எல்லாக் குத்தகை உடன்படிக்கைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அதிகாரசபையால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் குத்தகை உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டமா அதிபரால் அல்லது அவருக்கெதிராக, நியமிக்கப்பட்ட தேதியன்று தொடரப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதியன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லா வழக்குகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்திற்கேற்ப அதிகார சபையால் அல்லது அதற்கெதிராக தொடரப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் நிறைவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(4) பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டமா அதிபரின் சார்பில் அல்லது அவருக்கெதிராக ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளன்று தீர்க்கப்படாதிருப்பவையுமான எல்லா வழக்குத் தீர்ப்புகளும் கட்டளைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, விடயத்திற்கேற்ப அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகளாகவும் கட்டளைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடப்படுதலும் வேண்டும்.

40. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கு மிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

41. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

பொருள் கோடல்.

"நீரியல் பொருட்களைப் பண்படுத்தல்"; "நீரியல் பொருட்களைப் பண்படுத்தற் தொழில் முயற்சி", "நீர்வாழ் உயிரின வளங்கள்", "மீன்", "மீன்பிடிப்படகு", "மீன்பிடித்தொழில்", "மீன்பிடித் தொழிற்பாடுகள்" அத்துடன் "உள்நாட்டு நீர்நிலைகள்" என்பன 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.